## மாநாட்டு அமைப்புக்குழு

முனைவர் **த. வீரமணி,** மாநிலத்தலைவர் & மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்

முனைவர் **இரா. தாமோதரன்,** பொதுச்செயலர்

முனைவர் **ஆ. கோபாலகிருஷ்ணன்,** மாநிலப்பொருளர்

முனைவர் **க. இரமேஷ்,** மாநிலத்துணைத்தலைவர் ( பொது )

முனைவர் **உ. சிவப்பிரியா,** மாநிலத்துணைத்தலைவர் ( ம )

பேரா **சோ. சுரேஷ்,** மாநில இணைச்செயலர் ( பொ )

முனைவர் **த. மதுரம்,** மாநில இணைச்செயலர் ( ம )

முனைவர் **ப. ரமேஷ்,** மாநாட்டுச் செயலர்

முனைவர் **லூ. ராபர்ட்,** மாநாட்டுப் பொருளர்

மாநாட்டில் கலந்து கொள்ளும் மகளிர் உறுப்பினர்களுக்கும் அவர்தம் குழந்தைகளுக்கும் (சிறுவர்களாயின் 10 வயதிற்குள் இருத்தல் வேண்டும்) குறைந்த கட்டணத்தில் பாரதியார் பல்கலைக்கழகத்தில் உள்ள HRDC விடுதி மற்றும் பன்னாட்டு மாணவர் விடுதி ஆகியவற்றில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தங்கும் வசதி வேண்டும் மகளிர் உறுப்பினர்கள் 20.12.2018 ஆம் நாளுக்குள் 9600151589 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் ஆண் உறுப்பினர்கள் தங்குவதற்கு விடுதிகள் (Hotels) குறித்த விவரங்கள் மாநாட்டு இணையதளத்தில் (tngctaconf2019.com) தரப்பட்டுள்ளது. வேண்டுவோர் பயன்படுத்திக் கொள்ளலாம்.

முனைவர் **ப. ரமேஷ்**
மாநாட்டுச் செயலர்



முனைவர் **த. வீரமணி**
மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்



## தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

இக்கழகம் தமிழக அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மாநில அளவிலான அமைப்பாகும். 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இவ்வமைப்பு, தமிழகத்தில் உள்ள 98 அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளைத் தனது கிளைக் கழகங்களாகக் கொண்டுள்ளது. சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, தஞ்சாவூர், சேலம், கோவை, மதுரை & சிவகங்கை ஆகிய 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, 98 கிளைகளில் சுமார் 5300 உறுப்பினர்களைக் கொண்டுள்ள இவ்வமைப்பைத் தமிழக அரசு அங்கீகரித்து, 22.03.1980 இல் வெளியிட்ட அரசு ஆணை எண் 341 மூலம் அறிந்தேற்பு வழங்கியுள்ளது.

## கோவை மண்டலம்

பாரதியார் பல்கலைக்கழகத்தின் வரம்பிற்குட்பட்ட கோயம்புத்தூர், நீலகிரி, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 11 அரசு கலை அறிவியல் கல்லூரிகளும், ஒரு கல்வியியல் கல்லூரியும் கொண்டது கோவை மண்டலமாகும்.

மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டி இதமான தட்பவெப்ப சூழ்நிலையில் அமைந்துள்ள கோவை மண்டலத்தில் மலைகளின் இராணி என்றழைக்கப்படும் நீலமலையும் அதன் தலைநகர் உதகைக்குச் செல்லும் மலை இரயிலும் உலகச் சிறப்பு மிக்கதாகும். கோவை மாநகருக்கு வழங்கப்படும் சிறுவாணி குடிநீரின் சுவை உலகப்புகழ் பெற்றதாகும். இம்மண்டலத்தில் வரலாற்று சிறப்புமிக்க பேரூர்கோயில், அவினாசிகோயில், மருதமலை கோயில், வெள்ளியங்கிரி கோயில், ஈச்சனாரி கோயில், காரமடை ரெங்கநாதர் கோயில், மாசாணியம்மன் கோயில் உள்ளிட்ட பல திருக்கோயில்கள் அமைந்துள்ளன. மேலும், கோவை குற்றால அருவி, குரங்கருவி, வைதேகி அருவி, ஆனைமலை விலங்குகள் சரணாலயம், பரளிக்காடு, பவானி ஆறு, ஆழியாறு, டாப்சிலிப், அமராவதி அணை முதலைப் பண்ணை, உதகமண்டலம், முதுமலைக்காடு, போன்ற எண்ணற்ற சுற்றுலாத் தளங்களும் நிறைந்துள்ளன.

பாரதியார் பல்கலைக்கழகம், வேளாண்மைப் பல்கலைக்கழகம் போன்ற அரசுப் பல்கலைக் கழகங்களும் மூன்று அரசு மருத்துவக்கல்லூரிகளும் ஒரு பொறியியல் கல்லூரியும், வனக்கல்லூரியும் உள்ளன. அது மட்டுமின்றி பல்வேறு தனியார் பல்கலைக் கழகங்களும், மருத்துவக்கல்லூரிகளும், பொறியியல் கல்லூரிகளும் நிறைந்து தமிழகத்தின் கல்வித்தலைநகரமாக இம்மண்டலம் திகழ்கிறது.



தோற்றம் - 1971

**தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்**

**TAMILNADU GOVERNMENT COLLEGIATE TEACHERS' ASSOCIATION**

(Recognized by the Govt. of Tamilnadu G. O. No. 341, Dt.22.03.1980)

Prof. Narasingham Nilayam

No. 2, Sydoji Street, Triplicane, Chennai - 600 005.

www.tngcta.org - tngcta1971@gmail.com

# 19ஆவது
# மாநில மாநாடு

மற்றும்

# கருத்தரங்கம்

## "அனைவருக்கும் தரமான உயர்கல்வி – சவால்களும் சாதனைகளும்"

**5, 6 ஜனவரி 2019**

நிகழ்விடம் :

டாக்டர் **உஷா கீர்த்திலால் மேத்தா கன்வென்சன் சென்டர்**

**பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 046.**

## அழைப்பிதழ்

தோழமையீர் வணக்கம் !

தமிழக அரசின் உயர்கல்வித்துறையின் கீழ் செயல்படும் தமிழக அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் நலன் காக்கும் தமிழக அரசின் அங்கீகாரம் பெற்ற ஒரே சங்கம் தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகமாகும்.

சமூக அக்கறையுடன், சாதி-சமய சார்பற்ற, நாட்டுப்பற்று, மனித நேயம் மற்றும் அறிவியல் பார்வை கொண்ட சனநாயகக் கல்வி முறையை உருவாக்குவதில் தன் அர்ப்பணிப்போடு செயல்படும் இக்கழகத்தின் 19ஆவது மாநில மாநாடு எதிர்வரும் 2019 சனவரி திங்கள் 5 மற்றும் 6 ஆகிய இரு நாள்களில் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறுகிறது. இம் மாநாட்டில் "அனைவருக்கும் தரமான உயர்கல்வி - சவால்களும் சாதனைகளும்" எனும் பொருண்மையில் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

இம்மாநாட்டில் அமைச்சர் பெருமக்களும் உயர்கல்வித்துறை அதிகாரிகளும் கல்வியாளர்களும் பங்கேற்க இசைவு தெரிவித்துள்ளார்கள். கழகத்தின் பெருமைமிகு இம்மாநாட்டில் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் அழைக்கிறோம்.

மாநாட்டு அமைப்புக்குழு
**19ஆவது மாநில மாநாடு**
கோவை மண்டலம்

### கருத்தரங்கம்

இம்மாநாட்டில் "அனைவருக்கும் தரமான உயர்கல்வி - சவால்களும் சாதனைகளும்" எனும் பொருண்மையில் நடைபெறும் கருத்தரங்கிற்கு உரிய கட்டுரைகள் கல்வியாளர்கள் மற்றும் ஆர்வலர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது.

கருத்தரங்கப் பொருண்மைக்கு ஏற்றவாறு உரிய புள்ளிவிவரச் சான்றுகளுடன் கட்டுரைகள் தெளிவுற அமைந்திருக்கவேண்டும்.

### மாநாட்டு மலர்

மாநாட்டில் வெளியிடப்படும் மாநாட்டு மலரில் பதிப்பிப்பதற்கு அனைவருக்கும் தரமான உயர்கல்வி வழங்கும் இலக்கினை அடைவதற்குரிய சமூகப் பொருளாதார, கருத்தியல்களைக் கொண்ட கட்டுரைகள், கவிதைகள் உள்ளிட்ட பிற படைப்புகளை உறுப்பினர்களும் ஆர்வலர்களும் mail@tngctaconf2019.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

படைப்புகள் அனுப்புவதற்குரிய இறுதி நாள் டிசம்பர் 15-2018. கட்டுரைகள் இரண்டு வரி இடை வெளியில் 4 பக்க அளவிற்கு மிகாமல் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் அமைந்திருக்க வேண்டும். உரிய மேற்கோள் மற்றும் புள்ளிவிவரங்கள் தெளிவாகவும் முறையாகவும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். கட்டுரைகள் யுனிகோட் எழுத்துருவில் 12 என்ற அளவில் அமைக்கப்பட வேண்டும்.

படைப்புகள் தொடர்பாக மேலதிக விவரங்களுக்கு மாநாட்டு மலர்க்குழு பதிப்பாசிரியர் முனைவர் மு. மதியழகன் அவர்களை 9443355857 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

### மாநாட்டு மலர் - விளம்பரம்

மாநாட்டு மலரில் பதிப்பிக்கக் கல்வி மற்றும் வணிக நிறுவனங்கள் விளம்பரம் செய்யலாம். விளம்பரங்கள் அனைத்தும் பல வண்ணத்தில் பதிப்பிக்கப்படும்.

### பல வண்ண விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முன்னட்டையின் உள் பக்கம் | - ரூ. 2,00,000/- |
| பின்அட்டையின் உள் பக்கம் | - ரூ. 2,00,000/- |
| **உள்பக்கம்** | |
| முழுப் பக்கம் | - ரூ. 20,000/- |
| அரைப் பக்கம் | - ரூ. 10,000/- |
| கால் பக்கம் | - ரூ. 5,000/- |

விளம்பரங்களைத் தாங்கள் விரும்பிய வடிவில் தயார் செய்து mail@tngctaconf2019.com என்ற மின்னஞ்சலுக்கு, அனுப்பி வைக்கவும். விளம்பரக் கட்டணத்தைக் கீழ்க்காணும் வங்கிக்கணக்கில் CASH/CHEQUE/DD/NEFT/RTGS ஆக செலுத்தி அதன் இரசீது நகலை மேலே குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தால் விளம்பரப் பதிப்பிற்கான உரிய இரசீது அனுப்பி வைக்கப்படும். விளம்பரங்கள் தொடர்பாக மேலதிக விவரங்களுக்கு மாநாட்டுச் செயலரை 9842266785 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**வங்கிக்கணக்கு விவரம் :**

TNGCTA State Conference
CA : 19730110041888
IFSC : UCBA0001973
UCO Bank, Govt. Arts College Branch
Coimbatore - 641018.

UCO BANK